

## கடற்கரை கவியரங்கு எண் - 620

நாள் 04-12-2022

# மனம் தெளிக!

காலத்தின் கதவுகளை கண்ணீரால் நிரப்பாதே!
கோலமாம் வாழ்க்கையென்று குழம்பி நிற்காதே!
ஆலமாய் அறிவைப் பற்றி, ஆன்று சிந்திப்பாயே!
மூலமாய் அறிவும் திறந்து முகவரிதனை எழுதும்!

முயன்றால்தான் நல்வெற்றியுண்டு எந்நாளும்!
முயலாமை முயல்-ஆமைக் கதையாய் முடியும்!
அயலாரும் இல்லை அணைப்பாரும் இல்லை!
செயலாலே வெல்வோம் சிந்தனையை கொள்வோம்!

செங்கதிரின் ஒளியாக, செல்லுமிடம் நாம்மிளிர்வோம்!
பங்கமில்லை வாழ்வினிலே பரிதாபம் தானெதற்கு?
அங்கைக் கனியாக அனைத்தும் நாம் பெறுவோம்!
ஈங்கிதனால் நம்பெருமை எந்நாளும் வாழ்ந்திடுமே!

கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்
03-12-2022 (11.25 PM)

